

நகர் ஊரமைப்பு துறை

மாவட்ட நகர் ஊரமைப்பு அலுவலகம், திண்டுக்கல்

கரியாம்பட்டி ஊராட்சி

திண்டுக்கல் மாவட்டம், ஒட்டன்சத்திரம் வட்டம் / ஊராட்சி ஒன்றியம், கரியாம்பட்டி ஊராட்சி மற்றும் கிராமம், க.ச.எண். 214/2ஏ -ல் அமையும் உத்தேச குடியிருப்பு மனைப்பிரிவிற்கான தொழில்நுட்ப ஒப்புதல் வரைபடம்.

இணையதள விண்ணப்ப எண் : I4YPDY0F அளவு= 1 : 400

குறிப்பு:-

மனைப்பிரிவின் மொத்தப்பரப்பு : 2.45 ஏக்கர் (அ) 9920.00 ச.மீ

ஒதுக்கிய மனைகள் : 41

மனைப்பிரிவின் எல்லை

நிலையிலுள்ள சாலை

பொது ஒதுக்கீடு : (உள்ளாட்சிக்கு தானமாக ஒப்படைக்கப்பட்டவை)

மனைப்பிரிவு சாலையின் பரப்பு : 3054.70 ச.மீ

பூங்கா ஒதுக்கீடு : (மனைப்பிரிவின் மொத்தப்பரப்பு - மனைப்பிரிவு சாலையின் பரப்பு)x10%
: (9920.00-3054.70)X 10.00 % = 686.53 ச.மீ
(பூங்கா ஒதுக்கீடு அரசானை எண்.18 நகராட்சி நிர்வாகம் (ம) குடிநீர் வழங்கல் துறை, நாள் 04.02.2019-ன் படி 686.53 ச.மீ. க்கு அரசு வழிகாட்டு மதிப்பின்படி கட்டணம் மனுதாராரால் செலுத்தப்பட்டுள்ளது)

TANGEDCO (ம) பொது உபயோகத்திற்கு தேவையான பரப்பு
: (மனைப்பிரிவின் மொத்தப்பரப்பு - மனைப்பிரிவு சாலையின் பரப்பு)x0.5%
: (9920.00 ச.மீ -3054.70ச.மீ)x 0.5% =34.33 ச.மீ

பொது உபயோகம் : 49.02 ச.மீ-0.71 %

TANGEDCO : 39.59 ச.மீ-0.58 %

மூலை முடுக்கு:-

12.0 மீ வரை அகலம் உள்ள சாலைகளுக்கு 1.5மீ X 1.5 மீ விடப்படல் வேண்டும்.

நிபந்தனைகள்:-

1. அரசாணை எண்: 181, வீட்டு வசதி மற்றும் நகர்புற வளர்ச்சித்துறை நாள் 09.12.2020-ன்படியும் மற்றும் நகர் ஊரமைப்பு இயக்குநர் சென்னை அவர்களது கற்றறிக்கை ந.க.எண்.19799/2020/பே நாள்:24.12.2020-ன் படி மனைப்பிரிவு சாலைகள், மூலை முடக்கு மற்றும் பூங்கா ஆகியவைகள் உள்ளாட்சிக்கும் அரசாணை எண்: 18, ந.நி.(ம)கு.வ.(ந.ப.1) துறை நாள்:04.02.2019-ன்படியும் அரசாணை எண்.16, ந.நி (ம)கு.வ.துறை, நாள்.31.01.2020 ன்படியும் பொது உபயோகம் என ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ள இடத்தினை உள்ளாட்சிக்கு தனியாகவும், TANGEDCO என ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளதினை மின்பகிர்மான கழகத்திற்கு தனியாகவும் அல்லது ஊராட்சிக்கும் தானப்பத்திரம் மூலம் ஒப்படைப்பு செய்யப்படவேண்டும்.

2. இம்மனைப்பிரிவிற்கு உள்ளாட்சி இறுதி ஒப்புதல் அளிக்கும்முன் இத்தினை எந்தத்துறையாலும் நில ஆர்ஜித நடவடிக்கை மேற்கொள்ளப்படவில்லை என்றும், எந்த துறைக்காகவும் நில ஆர்ஜிதப்பட்டியல் மாவட்ட வருவாய் அலுவலருக்கு அனுப்பப்பட வில்லை என்றும், ஊராட்சி உறுதி செய்துகொள்ள வேண்டும்.

3. நகர் ஊரமைப்புத்துறை சட்டப்புர்வமாக தொழில்நுட்ப அனுமதி அளிப்பதன் மூலம் விண்ணப்பதாரரின் மேல் உள்ள நில உரிமையை உறுதிப்படுத்தவில்லை. தொழில்நுட்ப அனுமதி - திட்ட அனுமதி அளிப்பதற்கு முன்பு விண்ணப்பத்துடன் சமர்ப்பித்த ஆவணங்களின் படி (கிரையப்பத்திரம், குத்தகை பத்திரம், தான பத்திரம், பொது அதிகார பத்திரம், மற்றும் பட்டா) முதற்கட்டமாக விண்ணப்பதாருக்கு வளர்ச்சி செய்ய உரிமையுள்ளதா என்று மட்டுமே சரிபார்க்கப்படுகிறது.

4. நில உரிமம் குறித்து வழங்கப்பட்ட சான்றுகள் மற்றும் பரிசீலனைக்கு சமர்ப்பிக்கப்பட்ட ஆவணங்கள் சரியானவையல்ல என்று அறியப்பட்டாலோ அல்லது மனைப்பிரிவுக்கு தொழில்நுட்ப ஒப்புதல் வழங்கியதால் பாதிப்பு ஏற்ப்படக்கூடிய சூழ்நிலை ஏற்படும் மனைப்பிரிவுக்கு வழங்கப்பட்ட தொழில்நுட்ப ஒப்புதல் எவ்வித முன்னறிவிப்பும் இன்றி நகர் ஊரமைப்பு இயக்குநர், சென்னை அவர்களால் ரத்து செய்யப்படும்.

5. விற்பனைக்குண்டான மனைகளை விற்பனை செய்யும் போது இவ்வணையின் நகலோடு நகர் ஊரமைப்புத்துறையில் ஒப்புதல் அளிக்கப்பட்ட வரைபட நகல் மனை வாங்குபவர்களுக்கு கட்டாயம் வழங்கப்பட வேண்டும்.

6. ஒப்புதல் அளிக்கப்பட்ட மனைப்பிரிவு வரைபடத்தை எந்த வித மாற்றம் விடுதலின்றி மனைபிரிவு நுழைவாயிலில் 6' x 4' அளவிலான பிரந்த முகவல்பலகை மூலம் பொதுமக்கள் பார்வைக்கு நிரந்தரமாக பிரகரிக்கப்பட வேண்டும்

7. உத்தேச மனைப்பிரிவு சாலைகள், தார் சாலையாக அமைக்கப்பட்ட பின்னர், உத்தேச மனைப்பிரிவு சாலைகளின் தரம் குறித்து உரிய அலுவலரிடம் தகுதிச்சான்று பெற்று கொள்ளப்பட வேண்டும்.

8. உத்தேச மனைப்பிரிவின் ஊடே செல்லும் குறைந்த மின்னழுத்த கம்பிப்பாதையினை, மனுதாரர் தன் சொந்த செலவில், சாலையின் போக்கிற்கேற்ப மாற்றியமைக்கப்பட்டதை உள்ளாட்சியால் உறுதி செய்த பின் இறுதி ஒப்புதல் வழங்க வேண்டும்.

9. நகர் ஊரமைப்பு ஆணையர், சென்னை அவர்கள் கற்றிக்கையின்படி,"The Tamil nadu Government in G.O. Ms. No:112, Housing and Urban Development Department, Dated : 22.06.2017 have approved the Tamilnadu Real Estate (Regulation & Development) Act 2016 .The promoter has to advertise, Market, book, sell or offer for sale, or invite persons to purchase in any manner any piot, apartment or buliding as tha case may be in any Real Estate project or part of it only after registering the real estate project with the TNRERA (Tamil Nadu Real Estate Regulatory Authority)"

10. அரசாணை எண்.58, வீட்டுவசதி மற்றும் நகர்புற வளர்ச்சித்துறை நாள்.05.03.2024-யின்படி கிராம ஊராட்சிப் பகுதியில் அமைகிறது.

SWP/DTCP/DINDIGUL/LAYOUT NO.71/2025

Signature xalid Signature xalid

க.மகேந்திரன்
வரைவு உதவி வரைஞர்

Signed by: Deputy Director
Location: Dindigul
Date: 2025.05.30 17:49:17

Signed by: Village Panchayat President
Location: Dindigul
Date: 2025.07.04 12:46:31

கு.பாலகிருஷ்ணன்
கட்டிடகலை/திட்ட உதவியாளர்

துணை இயக்குநர்(பொ)
மாவட்ட நகர் ஊரமைப்பு அலுவலகம்
திண்டுக்கல் மாவட்டம்.